2021 பிப்ரவரி 3] [பேரவைத் தலைவர்]

அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற மக்கள் பணியாற்றியவரும், 2016 ஆம் ஆண்டு முதல் வேளாண்மைத் துறை அமைச்சராக திறம்படப் பணியாற்றியவருமான திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் 31–10–2020 அன்று உடல்நலக்குறைவால் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

முற்பகல் 10–10

விவசாயக் குடும்பத்தில் பிறந்த திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள், எளிமையும், இனிய பண்பும் தன்னகத்தே கொண்டவர். கட்சிப் பாகுபாடின்றி பழகி, அனைவரின் அன்பையும், பாராட்டுதலையும் பெற்றவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) திரு. எஸ்.பி. பாலசுப்பிரமணியம், பிரபல பாடகர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தேனினும் இனிமையான குரலால் அனைத்துத் தரப்பு மக்களையும் கவர்ந்தவரும், பிரபல திரைப்படப் பாடகரும், நடிகரும், 'எஸ்.பி.பி.' என்று*